CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

"அனைத்து குடிமக்களும் தங்கள் வாக்கை சுதந்திரமாக பொது நலனுக்காக பயன்படுத்துவதற்கான உரிமையையும் கடமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்." (Gaudium et spes – புதிய திரு அவை , N.75)

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,

கடந்த சில ஆண்டுகளாக நமது நாட்டில் வரலாறு காணாத அரசியல் கொந்தளிப்பை நாம் கண்டுள்ளோம், கடந்த பொதுத் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்பம், தங்கள் சொந்த மக்களுக்கு துரோகம் இழைத்த மற்றும் வழங்கப்பட்ட ஆணையைத் தவறாகப் பயன்படுத்தி அதிகாரத்திற்காக துடிக்கும் சுயநல அரசியல்வாதிகளால் குறைமதிப்பிற்கு உட்பட்டது. நம்மில் பலர் இன்னும் இந்த இழிநிலையில் இருந்து மீண்டு வருகிறோம் மற்றும் ஜனநாயக செயல்முறையின் மீது ஏமாற்றமடைந்துள்ளோம்.

ஆனால் இப்போது வழி ஒன்று பிறந்துள்ளது.
ஒரு தேசமாக நமக்கு ஒரு புதிய வாய்ப்பு கிடைத்துள்ளது, தவறுகளைச் சரி செய்வதற்கான ஒரு வாய்ப்பு மற்றும் அதிகாரப் பதவிகளில் அமர்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டியவர்கள் என்று, உரத்த செய்தியை அனைத்து அரசியல்வாதிகளுக்கும் அனுப்ப, இது நமது கடமையாகும்.

நமது தேசியக் கடமையை மட்டுமல்ல, நமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான நமது கிறிஸ்தவக் கடமையையும் செயல்படுத்த வேண்டும்.

"பொது நலனுக்கான அதிகாரம் மற்றும் கூட்டுப்பொறுப்புக்கு அடிபணிவது, வரி செலுத்துதல், வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துதல் மற்றும் ஒருவரின் நாட்டைப் பாதுகாத்தல் ஆகியவற்றைத் தார்மீக ரீதியாகக் கடமையாக்குகிறது." (சிசிசி 2240)

கத்தோலிக்க நம்பிக்கையால் உருவாக்கப்பட்ட நமது மனசாட்சியின்படி,செபத்துடன் பரிசீலித்து வாக்களிக்க வேண்டும்.
நமது முடிவை எடுப்பதற்கு முன் பின்வருவனவற்றையும் கருத்தில் கொள்வோம்:

1. மத சுதந்திரம் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் வேட்பாளர் மற்றும் அவரது கட்சியின் நிலைப்பாடு;
2. அவர்கள் ஊழலற்ற நேர்மையான நபர்களாக இருக்க வேண்டும்;

11 Jalan Gereja, 43000 Kajang, Selangor Darul Ehsan, Malaysia • +603 87331154 • HolyFamily@archkl.org

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

3. வேட்பாளர் பதவியில் இருப்பவராக இருந்தால், கடந்த பொதுத் தேர்தல்களில் இருந்து அவரது செயல்பாடு நிலை;
4. வேட்பாளர் நம்பகமான மற்றும் வாக்காளர்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய ஒருவரா அல்லது தனிப்பட்ட ஆதாயத்திற்காக அரசியல் கூட்டணிகளை மாற்றிக் கொண்டாரா?

இந்நிகழ்ச்சிக்கு ஆயத்தமாக, காஜாங் திருக்குடும்பம் தேவாலய பங்கு அருள் தந்தையர்கள் நாங்கள், அனைத்து பங்கு மக்களையும் இறைவேண்டலில் ஒன்றுகூடி, நற்கருனை ஆராதனையில் நமது கவலைகள் மற்றும் பகுத்தறிவு செயல்முறையை இறைவனின் முன் கொண்டு வருமாறு அழைப்பு விடுக்கிறோம்.

நவம்பர் 19 ஆம் தேதி GE 15 வரை, தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் (11/11 மற்றும் 18/11) இரவு 8 மணிக்கு திருமணி ஆராதனை கொண்டாடுவோம். நம் நம்பிக்கை கடவுளின் கையில் உள்ளது என்று நம்பித்தான் செய்கிறோம். “ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில், அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்; ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்." (தி.பாடல் 127:1)

இறைவா! எமது தேசிய மற்றும் மாநில அரசாங்கங்களில் எங்களை பிரதிநிதித்துவப்படுத்தி வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுப்பதில் எங்களுக்கு தேவையான ஞானத்தையும் தைரியத்தையும் தூய ஆவியானவர் நமக்கு வழங்குவாராக. எனவே, நாங்கள் வலியுறுத்துகிறோம், எழுந்து நிற்கவும், எங்கள் தேசத்தின் பொது நலனை நிலை நிறுத்தவும், புத்திசாலித்தனமாக தேர்தலில் தேர்வு செய்யவும் வேண்டும்.

உங்கள் வாக்கு நமது தேசத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

மலேசியாவை இறைவன் ஆசீர்வதிப்பாராக!

உங்கள் அன்பான
அருள் தந்தையர்கள்,

மறைதிரு. மைக்கல் சுவா
மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
மறைதிரு.பிலிப் சுவா
நவம்பர் 6, 2022
பொதுக்காலம் முப்பத்தி இரண்டாவது ஞாயிறு